**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண்.413/2018**

PW2 – அமிர்தலெட்சுமி,க/பெ. சண்முகராஜ்
நாள்–25.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனது கணவர் ரெங்கநாதன் மற்றும் வைரகண்ணு ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மாமனார் சொத்தில் எனது கணவருக்கு பாகம் இருப்பதாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் புல எண். தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 100 அல்லது 105 குழி இருக்கும். தாவா சொத்து என்ன வகைபாடு என்றால் புஞ்சையாகும். எனது பிறந்த ஊர் தரங்கபாடி வட்டம் சந்திரபாடி கிராமம் ஆகும். சொத்து யாரால் எப்போது கிரயம் பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் பிறக்கவே இல்லை. எனக்கு எப்போது திருமணம் நடைப்பெற்றது என்றால் 1999–ம் ஆண்டு நடைப்பெற்றது. தாவா சொத்தில் மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள மாடி வீடு 1–ம் பிரதிவாதியின் தகப்பனரான வைரக்கண்ணுவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் எப்போது ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சுனாமி ஏற்பட்ட வருடம் தலைவராக இருந்தார். திருமணத்திற்கு பிறகு ஏற்பட்ட நிகழ்வுகள் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றும், அதற்கு முந்தைய நிகழ்வுகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு எனது மாமனார் உயில் மூலம் தாவா சொத்தை பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. உயில்படி தாவா சொத்திற்கான

வருவாய்துறை ஆவணங்கள் வைரகண்ணு பெயரில் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான்சொல்வது போல் 1–ம் பிரதிவாதியின் தகப்பானர் தனது தலைவர் பதவியை வைத்து தாவா சொத்தில் வருவாய்துறை ஆவணகளை மாற்றவில்லை என்றும், உயில் ஆவணத்தின்படியே பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதியின் தகப்னார் பெயரில் பெயர் மாற்றம் ஏற்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2009–ம் ஆண்டு ஆகும். அப்போதுதான் மேற்படி விபரம் எனது கணவருக்கு தெரியவந்தது என்றால் சரிதான். இது சம்மந்தமாக வருவாய்துறையில் நானோ எனது கணவரோ எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து 1–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு உயில் படி பாத்தியப்பட்டது என்பதால்தான் நாங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்தாக இருந்திருப்பின் எனது மாமனாரின் வாரிசுகள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், பூர்விக சொத்து இல்லை என்பதால்தான் அவ்வாறு யாரும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது கணவருக்கு பாகம் இருந்திருப்பின் அதற்கான வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும், அவ்வாறு பாகம் இல்லை என்பதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

தாவா சொத்து 1–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு உயில் படி கிடைக்கப்பெற்ற சொத்தை அவரது மகனான 1–ம் வாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும் தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து சம்பந்தமாக எங்களுக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை என்றால் சரிதான். எனவே 2–ம் பிரதிவாதி இவ்வழக்கின் அவசியமற்ற தரப்பினர் என்பதால் அதன் அடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**